

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 19.05.2026

# பெட்ரோல் - டீசல் விலை உயர்வு!

ஐந்து மாநிலத் தேர்தல் முடிந்ததும் உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப் பட்ட பெட்ரோல், டீசல் விலை இப்போது உயர்ந்துவிட்டது. லிட்டருக்கு 3 ரூபாய் உயர்த்தி இருக்கிறார்கள். பெட்ரோல், டீசல் விலை என்பதை தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது. பெட்ரோல், டீசல் விலை உயர்ந்தால் அனைத்துப் பொருட்களின் விலையும் உயரும். எனவே ஒரு தொடர் சங்கிலியின் தொடக்கத்தை உயர்த்தி அனைத்தையும் உயர்த்தி விட்டார்கள்.

**வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை உயர்த்தி பெரும்பான்மை மக்களின் நிம்மதிக்கு மே மாதம் முதல் நாளில் உலை வைத்தது பா.ஜ.க. ஐந்து மாநிலத் தேர்தல் முடியும் வரை காத்திருந்து, கடைசி வாக்குப்பதிவு முடிந்ததும் உயர்த்தினார்கள்.**

**சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை மாதம்தோறும் ஒன்றாம் தேதியன்று பொதுத்துறை நிறுவனங்கள் உயர்த்தி வருகிறது. இதனடிப் படையில் கடந்த மே 1 ஆம் தேதியன்று சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தி விட்டன. 19 கிலோ எடை கொண்ட வணிக சிலிண்டர் விலையில் 993 ரூபாய் ஒரே நேரத்தில் உயர்த்திவிட்டார்கள். அதாவது ஏறத்தாழ ஆயிரம் ரூபாயை ஒரே நேரத் தில் உயர்த்தி விட்டார்கள். இதன் மூலமாக உணவகங்களில் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து விட்டது. அடுத்து பெட்ரோல், டீசல் விலை உயர்வு தான் என்று சொல்லப்பட்டது. அதுவும் நடந்துவிட்டது.**

**பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலை லிட்டருக்கு 3 ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ3.14 உயர்கிறது. இனி லிட்டர் விலை ரூபாய் 103.98 ஆகும். டீசல் விலை ரூ 3.11 உயர்கிறது. இனி ஒரு லிட்டர் டீசல் விலை 95.50 ரூபாய் ஆகும். இயற்கை எரிவாயு (சி.என்.ஜி.) விலை 2 ரூபாய் உயர்த் தப்பட்டுள்ளது. அதன் விலை கிலோ ரூபாய் 91.50 ரூபாய் ஆகும்.**

2022 ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்போதுதான் விலை உயர்த்தப் படுகிறது என்று காரணம் சொன்னாலும், இது அப்பாவி மக்களைப் பாதிக்கும் விலை உயர்வு ஆகும்.

2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னாக பெட்ரோல், டீசல் விலையை தலா 2 ரூபாய் குறைத்தார்கள். இது நாடாளுமன்றத் தேர்தலுக்காக நடத்தப்பட்ட நாடகம் ஆகும். இப்போது 3 ரூபாய் அதிகரித் துள்ளார்கள். இது தேர்தலுக்குப் பிறகு மக்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை ஆகும்.

இந்த விலை உயர்வுக்கு மேற்காசியப் போரை ஒரு காரணமாகச் சொல்கிறார்கள். போர் இல்லாத காலத்தில் பெட்ரோல், டீசல் விலையைக் குறைத்தார்களா? குறைவாக இருந்ததா?

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வை ஒரு காரண மாகச் சொல்வார்கள். கச்சா எண்ணெய் விலை குறைந்த காலத்தில் பெட்ரோல், டீசல் விலை குறைக்கப்பட்டதா என்றால் இல்லை. இல்லவே இல்லை. எப்போதும் மாதத்துக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு என்ற பல்லவியைத் தான் தொடர்ந்து பாடி வருகிறார்கள். எவ்வளவு விலையை உயர்த்தினாலும் இந்த எண்ணிக்கையை அவர்கள் குறைப்பது இல்லை.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒரு காரணம் சொல்வார்கள். இப்போது சொல்வது மேற்காசியப் போர் ஆகும். எல்லாக் காலத்திலும் உலகில் ஏதோ ஒரு மூலையில் போர் நடந்து கொண்டுதான் இருக்கும். அதையே காரணமாகச் சொல்வதா?

ஏழை எளிய மக்களைப் பாதிப்பது மட்டுமல்ல; சிறுகுறு நடுத்தர நிறுவனங்களையும் இது பாதிக்கும். நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மனதில் வைத்து ஒன்றிய பா.ஜ.க. அரசு எப்போதும் செயல்பட்டது இல்லை. இதுபோன்ற விலை உயர்வு சாதாரண மக்களை எந்த வகை யில் பாதிக்கும் என்பதை பா.ஜ.க. உணர்ந்து செயல்பட்டிருக்க வேண்டாமா? இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று மக்களுக்கு அறிவுரை சொல்லும் அரசு, இதுபோன்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்த எதையாவது செய்தார்களா என்றால் இல்லை.

**பெட்ரோல், டீசல் விலை உயர்வைத் தொடர்ந்து வீட்டுப் பயன்பாட்டு சமையல் காஸ் சிலிண்டர் விலையையும் உயர்த்த எண்ணெய் நிறு வனங்கள் திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகி உள்ளது. கடந்த மார்ச் 7 ஆம் தேதி தான் வீட்டுப் பயன்பாட்டுக்கான சமையல் காஸ் சிலிண்டர் விலை 60 ரூபாய் உயர்த்தப்பட்டது. இப்போதும் மேலும் கூட்டப் போகிறார்கள். 50 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை அதிகரிக்க லாம் எனச் சொல்லப்படுகிறது. இது ஏழை எளிய, நடுத்தர மக்களின் தலையில் பெரும் சுமையை உருவாக்கப் போகிறது.**

பெட்ரோல், டீசல் விலை உயர்வால் சரக்குப் போக்குவரத்து செலவுகள் அதிகரிக்கப் போகிறது. இதனால் அனைத்துப் பொருட்களின் விலையும் உயரப் போகிறது. காய்கறி, மளிகைப் பொருட்களின் விலை எகிறப் போகிறது. இதனால் சாதாரண, சாமானிய மக்கள் செலவழிக்கும் தொகை அதிகம் ஆகப் போகிறது. பயணக் கட்டணங்கள் அதிகரிக்கும். தனியார் பேருந்துகள் தங்களது கட்டணத்தை அதிகரிப்பார்கள். இப்படி ஒவ்வொன்றாக உயரவே செய்யும்.

**சில நாட்களுக்கு முன் பிரதமர் மோடி பேசும் போது, வீட்டில் இருந்தே வேலை பாருங்கள், பெட்ரோல், டீசல் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டும், பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த வேண்டும். மின் வாகனங்களை பயன்படுத்த வேண்டும் என்பது போன்ற கட்டுப்பாடு களைப் போட்டார். ஊரடங்கை நோக்கி ஒன்றிய அரசு செல்கிறதோ என்ற அச்சத்தை இது உருவாக்கி உள்ளது.**

**வாக்களித்த மக்களை வேட்டையாடும் வழக்கத்தை பிரதமர் மோடி நிறுத்திக் கொள்ள வேண்டும்.**




நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மேற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அரங்கில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன், மாநில நிர்வாகிகள், ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தமயந்தி, தமிழ்ச்செல்வன் ஆகியோர் உள்ளனர்.

### முன்மொழிக் கொள்கையை தி.மு.க. தொடர்ந்து எதிர்த்து வருகிறது!

# எந்தவிதமான மொழித் திணிப்பையும் ஏற்றுக் கொள்ள முடியாது!

## நெல்லையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**நெல்லை, மே 19 - மும்மொழிக் கொள்கையை தி.மு.க. தொடர்ந்து எதிர்த்து வருகிறது. புதிதாக பதவியேற் றுள்ள அரசு தமிழக மக்களின் உணர்வை புரிந்து கொண்டு மும்மொழி கொள்கையைக் தொடர்ந்து எதிர்க்க வேண்டும். எந்த விதமான மொழி திணிப்பை யும் ஏற்றுக் கொள்ள முடியாது. என நெல்லையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தெரிவித்தார்.**



நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மேற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அரங்கில் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலா ளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்றார்.

பின்னர் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தெரிவித்ததாவது:-

மும்மொழிக் கொள்கையை தி.மு.க. ஆட்சியில் இருந்த போதும் சரி இப்போதும் சரி, தொடர்ந்து எதிர்த்து கொண்டு தான் இருக்கிறது.

புதிதாக பதவியேற்றுள்ள அரசு தமிழக மக்களின் உணர்வை புரிந்து கொண்டு மும்மொழி கொள்கையை தொடர்ந்து எதிர்க்க வேண்டும். எந்த விதமான மொழி திணிப் பையும் ஏற்றுக் கொள்ள முடி யாது.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தெரிவித்தார்.

### சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட

# தி.மு.க. கள ஆய்வுக் குழு ஆய்வை தொடங்கியது!

## கட்சியினரை தனித்தனியாக சந்தித்து கருத்துகளை கேட்டனர்!

**சென்னை, மே 19 - சட்டசபை தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட திமுக கள ஆய்வு குழு நேற்று முதல் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. கட் சியினரை தனித்தனியாகச் சந்தித்து தேர்தல் முடிவு தொடர்பாக கருத்துகளை கேட்டனர்.**

தமிழக சட்டசபை தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு செய்ய 36 பேர் கொண்ட குழுவை தி.மு.க. அமைத் துள்ளது. இக்குழுவினருடன் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தியி ருந்தார்.

அப்போது அவர், தனிப் பட்ட விருப்பு வெறுப்பின்றி, கட்சிக்காரர்கள் சொல்லும் உண்மையை அப்படியே வந்து என்னிடம் சொல்வது மட்டுமே உங்கள் வேலை. நீங்கள் யாரையும் காப்பாற்ற வும் முயற்சி செய்ய வேண் டாம். யாரையும் பழிவாங்க வும் எண்ணக் கூடாது. தி.மு.க.வினரை மனதுவிட் டுப் பேச அனுமதியுங்கள். அவர்களின் குறைகளை, தேர்தல் முடிவு களுக்கான காரணங்களை அவர்கள் கொட்டித் தீர்க்கட்டும். தலை வரான என் மேலேயே குறை சொன்னாலும் பரவா யில்லை. அதைக் குறித்து வைத்து உங்களது அறிக் கையில் வழங்குங்கள்.

நிர்வாகிகளின் உணர்வு என்ன? அவர்கள் உண்மை யில் என்ன நினைக் கிறார் கள்? அது மட்டும்தான் எனக் குத் தேவை” என்று அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் சட்டசபை தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப் பட்ட ஆய்வு குழு நேற்று முதல் தமிழகம் முழு வதும் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளில் சுற்றுப்பய ணம் செய்தது. சென் னையை பொறுத்தவரை திருவொற்றியூர், மாதவரம், ஆர்.கே.நகர், பெரம்பூர், ராயபுரம், கும்மிடிப் பூண்டி, பொன்னேரி, ஆவடி, பூவி ருந்தவல்லி, திருத்தணி, திரு வள்ளூர் ஆகிய சட்டமன்றத் தொகுதி களுக்கு எம்.எம்.அப் துல்லா, ரேகா பிரியதர்ஷினி ஆய்வு செய்தனர்.

எழும்பூர், கொளத்தூர், அம்பத்தூர், துறை முகம், திரு.வி.க.நகர், வில்லி வாக் கம், சைதாப்பேட்டை, சோழிங்கநல்லூர், மதுரவா யல், விருகம்பாக்கம், வேளச் சேரி, அண்ணாநகர், ஆயி ரம்விளக்கு, சேப்பாக்கம், திருவல்லிக் கேணி தொகுதிக ளுக்கு எஸ்.கே.பி. கருணா, கே.ஈ.பிரகாஷ் எம்.பி. சென்ற னர்.

உத்திரமேரூர், காஞ்சிபு ரம், செய்யூர், மதுராந்தகம், ஆலந்தூர், செங்கல்பட்டு, தாம்பரம், திருப்பெரும்புதூர், திருப்போரூர், பல்லாவரம், தியாகராயர் நகர், மயிலாப் பூர் தொகுதிகளுக்கு ஹெலன் டேவிட்சன், கே.இளமகிழன் கள ஆய்வு நடத்த உள்ளனர்.

இதேபோல் தமிழ்நாடு முழுவதும் குழு சென்று நேற்று ஆய்வு மேற்கொண்ட னர். இந்த குழு மாவட்டச் செயலாளர், தொகுதி பார்வை யாளர், வேட்பாளர்கள், தொகுதிக்கு உட்பட்ட செயற் குழு, பொதுக்குழு உறுப்பி னர்களை தனித்தனியாக சந் தித்து பேசினர். அதோடு மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்களையும் தனித்தனியே சந்தித்து அவர் களின் கருத்துக்களை கேட்ட னர்.

இச்சந்திப்பின்போது மாவட்டச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், வேட்பாளர்கள் உள்ளிட்டவர் கள் உடன் இருக்கக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள் ளது. கள ஆய்வு செய்யும் குழு ஜூன் 5ம் தேதிக்குள் அறிக்கையை சமர்ப்பிக்க தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். கள ஆய்வு குழு தரும் அறிக்கை யின் அடிப்படையில் தி.மு.க.வில் நடவடிக்கை களை மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



**தி.மு.க.**
**இளைஞர் அணி**

**மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்**
**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 23.05.2026 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் துணைச் செயலாளர்கள் முன்னிலையில், **கழகத் தலைவர்** அவர்களின் சிறப்புரையுடன் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்**
- ஜூன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்
- கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-05-2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி